பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ மார்கழி மீ 11 உ புதன்கிழமை (26-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 30

# பூந்தோட்டம் பகுதியில் பயணிகள் மிதிவெடிகளில் சிக்கி காயமுற்றனர்!

## பத்து பொதுமக்கள் கால் இழப்பு

யாழ்ப்பாணம், டிசம்பர் 26

**கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி வந்த தமிழ்ப் பயணிகள் வவுனியா பூந்தோட்டப் பகுதியில் படையினர் வைத்த மிதிவெடிகளில் சிக்கினர். நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற சம்பவங்களில் பத்து பயணிகள் வரை இவ்வாறு படுகாயமுற்றனர். மேலும் சிலர் சிறிய காயங்களுக்கு இலக்காகினர்.**

கொழும்பிலிருந்து நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமைக்குப் பின்னர் ரயிலில் கொழும்பிலிருந்து புறப்பட்டு வவுனியா வந்து சேர்ந்த சுமார் ஐநூறு பயணிகள் வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## சூடு பட்டு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச.26

ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுக் காலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனப் பகுதியில்- மீசாலையைச் சேர்ந்த- என். இராசேந்திரம் [வயது 37] என்பவர் காயமுற்றார். [உ-15]

## கொழும்பு புறப்பட்டோர் இடைவழியில்திரும்பினர்

யாழ்ப்பாணம், டிச. 26

கொழும்பிலிருந்து வந்த பயணிகள் வவுனியாவில் மிதிவெடிகளில் சிக்கிய செய்தி வெளியானதை அடுத்து—

கொழும்பு செல்வதற்காக இங்கிருந்து புறப்பட்டு- வவுனியாவுக்குள் செல்லமுடியாமல்- ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதியில் தங்கி நின்ற பயணிகள் உடனே தமது பயணத்தை இடைவழியில் நிறுத்திவிட்டு யாழ். திரும்பினர்.

கொழும்பு செல்வதற்காக புறப்பட்ட பல நூற்றுக் கணக்கான பயணிகள் இப்பகுதிகளில் தங்கி நின்றனர்.

அவர்கள் நேற்றிரவு கூட்டம் கூட்டமாக யாழ். திரும்பி வந்து கொண்டிருந்தனர். (உ)

### நத்தார் தினத்தில் அனர்த்தம்:

## சாவகச்சேரியில் பொம்மர்கள் இரண்டு தடவைகள் குண்டுவீச்சு

தென்மராட்சி, டிச. 26

சாவகச்சேரியில் நேற்று இரு தடவைகள் பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்தின.

முதலாவது குண்டு வீச்சு காலை 9 மணி அளவிலும் இரண்டாவது குண்டு வீச்சு 10 மணி அளவிலும் இடம் பெற்றது.

தபாற் கந்தோர் வீதிப் பகுதியில் மூன்று பொம்மர்கள் முதலில் குண்டு வீசித் தாக்கின.

இந்த குண்டு வீச்சில் இருவர் காயம் அடைந்தனர். ஒருவர் இ. இராஜகுலசிங்கம் (52 வயது), மற்றவர் த. நித்தியலட்சுமி (45 வயது).

வெல்டிங் வேக்ஸ் ஒன்றின் உரிமையாளரான இராஜகுலசிங்கம் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

10.00 மணி அளவில் இடம் பெற்ற இரண்டாவது குண்டு வீச்சின்போது ஒரு குண்டு சாவகச்சேரி சிவன் கோயில் பகுதியில் உள்ள வெறும் காணியில் விழுந்து வெடித்தது. மூன்று குண்டுகள்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பளையிலும் நேற்று விமானக் குண்டு வீச்சு!

தென்மராட்சி, டிச.26

நேற்று பளையிலும் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

காலை 9.15 மணி அளவில் மூன்று பொம்மர்கள் பளை நகரப் பகுதியில் குண்டுகளை வீசின.

குண்டுகள் அடுத்தடுத்து ஒரே காணிக்குள் விழுந்து வெடித்தன.

பளை மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலை, மற்றும் மூன்று வீடுகள் குண்டு வீச்சினால் சேதமுற்றன.

பளை தபால் கந்தோர் சுட்டடமும் இத்தாக்குதலில் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சின் போது சில தென்னை மரங்களும் முறிந்தன. [இ-117]

## தமிழ்நாடு மாநில அரசு கலைக்கப்படமாட்டாது!

### பிரதமர் சந்திரசேகர் அறிவிப்பு

சென்னை, டிச. 26

★ தமிழக மாநில அரசைக் கலைக்கும் எண்ணம் மத்திய அரசுக்கும் கிடையாது.

★ மாநில அரசு கலைக்கப்படும் என வெளியான தகவல் வெறும் ஊகம் தான்.

இந்தியப் பிரதமர் சந்திரசேகர் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

பிரதமராக பதவியேற்ற பின்னர் தமிழகத்துக்கு முதல் தடவையாக நேற்று விஜயம் செய்த அவர், காஞ்சிபுரத்தில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மாநில அரசுகளை எச்சரிப்பது மத்திய அரசின் வேலை அல்ல. தவறுகள் இடம் பெறும் சமயங்களில் மாநில அரசுகளை சரியான வழியில் செல்ல உதவுவதே மத்திய அரசின் கடமையாகும்.

தமிழகத்தில் இலங்கைத் தமிழ் போராளிகள் விடயத்தில் மாநில அரசின் அணுகு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், டிச. 26

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 2 மணியளவில் அல்லைப்பிட்டி, புளியங்கூடல், வேலணை கிழக்கு, கரம்பன் ஆகிய பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இப்பகுதி மக்கள் பீதியால் இடம்பெயர்ந்தனர். [உ-15]

## 15 தமிழ் அகதிகள் சீனன்குடாவில் கைது!

யாழ்ப்பாணம், டிச. 26

சீனன்குடா கிளப்பன்பேர்க் அகதி முகாமிலிருந்த 15 தமிழர்கள் அருகில் உள்ள இராணுவ முகாம் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கிளப்பன்பேர்க் முகாமிலிருந்து அடிக்கடி பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்படும் தமிழ் அகதிகள் உவர்மலை பிளான்டன் பொயின்ற் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டு வருவதாக அவ்வப்போது செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## ஹெலி மூலம் பணம், மருந்து செஞ்சிலுவை குழுவினரால் கொண்டுவரமுடியாதா?

### அதிகாரிகள் மாநாட்டில் கேள்வி

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ்ப்பாண மக்களுக்கு அவசரம் தேவைப்படும் பணத்தையும் மருந்து வகைகளையும் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு, தனக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றின் மூலம் கொண்டு வர முடியாதா?

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் புதுடில்லியில் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் என்பன இருக்கின்றன; மனம் வைத்தால் ஒரு ஹெலிக்கொப்டரைக் கொண்டு வந்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பணத்தை எடுத்து வரலாம் அல்லவா?

இவ்வாறு அர்த்தபுஷ்டியான கேள்வியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடமே கேட்டார் துணிச்சல் மிக்க அரசாங்க உயர் அதிகாரி ஒருவர்!

யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகளைச் செய்வது சம்பந்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கலகலப்பு ஏதுமின்றி கழிந்த நத்தார்

யாழ்ப்பாணம், டிச. 26

இயேசுநாதர் அவதரித்த நாளான நத்தார், நேற்று ஆடம்பரம் இன்றிக் குடாநாட்டில் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்பட்டது.

தற்போதைய போர்க்கால நிலைமை, உணவுப் பண்டங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஆகியவற்றால் நத்தார் தினம் கலகலப்பு எதுவும் இன்றி நேற்று அமைதியாகக் கழிந்தது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் வழமைபோல் நேற்று நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றன. நத்தார் தினத்தையொட்டி கரோல் ஆராதனையும் பல தேவாலயங்களில் இடம்பெற்றது.

சில தேவாலயங்களில் பாடகர் கோஷ்டிகள் வீடுகளுக்கு விஜயஞ் செய்திருந்தன. (இ-6)

## அடக்குமுறைகளை விட்டு உரிமைகளை வழங்குங்கள்!

### பாப்பரசர் நத்தார் செய்தி

வத்திக்கான், டிச. 26

போர் என்பது விளைவு எதனையும் தராத ஒரு பயனமாகும், எனவே உலகத் தலைவர்கள் தங்கள் நாடுகளிலும், உலகிலும் அமைதி நிலைக்கப் பாடுபட வேண்டும்.

அடக்குமுறைகளைத் தூர வைத்து மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் நேற்று விடுத்த நத்தார் செய்தியில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## சாராயப் போத்தலில் தவளை! நாடாளுமன்றத்திற்கு வந்தது!!

கொழும்பு, டிச. 26

கடந்தவார இறுதியில் நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசிய ஸ்ரீ ல. சு. கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான திஸ்ஸ விக்கிரமரட்ன திடீரென சபையின் முன்னால் ஒரு சாராயப்போத்தலை எடுத்து வைத்தார்.

''இந்தச் சாராயப் போத்தலில் ஒரு தவளை இருக்கிறது. நீங்கள் தயாரிக்கும் புதுரக சாராயமா இது?'' – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

''ஏழை மக்கள் அருந்தும் சாராயத்தை இப்படியா தயாரிப்பது?'' என்று அவர்கேள்வி எழுப்பினார்.

அந்தச் சமயம் ஆளும் கட்சி எம். பியான அஸ்வர் சாராயப்போத்தலை நாடாளுமன்

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையிடம் சிக்கிய ஆறுபேர் விடுவிப்பு

நவம்பர் 2 ஆம் திகதி தமிழகம் செல்லும்போது ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் அறுவர் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

கச்சதீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதானவர்களில் அறுவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இருவர் இந்தியர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறுவரும் கடந்த 21 ஆம் திகதி நயினாதீவில் வைத்து கடற்படையினரால் விடுவிக்கப்பட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

குருநகரைச் சேர்ந்த தேவதாஸ், ஜோன் அன்ரன், சூசைப்பர், விஸ்வலிங்கம், யாழ். பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த ராஜன், தெல்லிப்பழையைச் சேர்ந்த கதிரமலை ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

(இ-51)

# நகரப் பகுதியில் பறந்த விமானங்களால் பீதி!

குருநகர், டிச. 26

நேற்றுக் காலை இருதடவைகள் யாழ். நகரின் மீது தாழப் பறந்து வட்டமிட்ட விமானங்களால் நகரப்பகுதி மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்.

காலை 7-30 மணியளவில் தனித்து வந்த 'அவ்ரோ' விமானம் ஒன்று நகரைச் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

பின்பு 10 மணியளவில் இரு சிறிய ரக விமானங்கள் மேற்கில் இருந்து வடக்குத் தெற்காக வந்து கிழக்கு நோக்கிச் சென்று மறைந்தன.

(இ-51)

# அதிபர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 26

அண்மையில் முதலாம், இரண்டாம் தர அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கான கருத்தரங்குகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கருத்தரங்கை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்துகிறது.

கருத்தரங்கை வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

முதலாம் தர அதிபர்களாக பதவியுயர்வு பெற்றவர்களுக்கு நாளையும், இரண்டாம் தர அதிபர்களாக பதவியுயர்வு பெற்றவர்களுக்கு நாளை மறுதினமும் கருத்தரங்கு நடைபெறும்.

(உ-6)

## கப்பலில் இருந்து

# அரிசி இறக்கிய பின்னரே 2 ஆம் கட்ட நிவாரணம்

'லங்காசிறி' கப்பலில் உள்ள அரிசி இறக்கப்பட்டு நகருக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 2 ஆம் கட்ட விசேட உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

சங்கத்தின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

2 ஆம் கட்ட நிவாரணத்துக்குரிய ஏனைய பொருள்கள் கையிருப்பில் இருப்பதாகவும்-

அரிசி இறக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இன்னும் - ஒரு சில தினங்களில் - இந்த நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

சீரற்ற காலநிலை காரணமாக கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவது தாமதமாவதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அரிசியை ஏற்றிவர நேற்றுப் பருத்தித்துறைக்குச் சென்ற யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் வேறு பொருள்களுடனேயே திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-5]

# அதிபர்கள் முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் பதவி உயர்வு பெற்ற II ஆம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள பிரஸ்தாப பயிற்சி நெறி, காலை 8-30மணி தொடக்கம் 2-30 மணிவரை நடைபெறும் என்று முகாமைத்துவ நிலையப் பொறுப்பாளரான கல்வி அதிகாரி திரு. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

# எதிர்க்கட்சி தலைவராக அத்வானி தெரிவானார்

## ராஜீவ் பதவி இழந்தார்

புதுடில்லி, டிச. 26

இந்திய லோக சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி இழக்க நேரிட்டுவிட்டது.

அந்தப் பதவி சபையின் இரண்டாவது அதிகப்படியான உறுப்பினர்களை -85 உறுப்பினர்களை- தற்போது கொண்டிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு வழங்கப்பட்டது.

அக்கட்சியின் தலைவரான திரு.லால்கிஷன் அத்வானியை எதிர்க் கட்சித் தலைவராக சபாநாயகர் ரபிராய் கடந்த திங்கட்கிழமை அங்கீகரித்தார்.

சபையில் முதலாவது அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக 195 எம்.பி.க்களுடன் விளங்கும் இந்திரா காங்கிரஸ்தான் இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்து வந்தது.

ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி புதிய அரசு ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் உதவியதைத் தொடர்ந்து, அதுவரை எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு ராஜீவ் காந்தி அந்தப் பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று.

எதிர்க் கட்சித் தலைவர் பதவி, அமைச்சர் அந்தஸ்துடன் கூடியதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-எ]

## யாழ். மாவட்டத்தில் பணப் புழக்கத்துக்கு

# 6 மாதகாலத் தேவை: 180 கோடி ரூபா

# ஆனால் வந்ததோ $5\frac{1}{2}$ கோடிரூபாவே!

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். மாவட்டத்தில் கடந்த 6 மாத காலத்தில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய-புழக்கத்தில் விடுவதற்கு-180 கோடி ரூபா பணம் தேவைப்பட்டது. ஆனால் இந்தக் காலப் பகுதியில் கொழும்பிலிருந்து ஐந்தரைக் கோடி ரூபா மட்டுமே கிடைத்தது!

இலங்கை வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மூன்று அரச வங்கிகளின் பல கிளைகளும், இரண்டு தனியார் வங்கிகளும் இயங்கி வருகின்றன.

மாவட்டத்தில் ஊழியர்கள் சம்பளம், ஓய்வூதியம், மற்றும் முக்கிய தேவைகளுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றுக்கு மாதாந்தம் 30 கோடி ரூபா பணம் தேவை.

இலங்கை வங்கிக் கிளைகளுக்கு மட்டும் ஒரு மாதம் கொடுப்பனவுகளுக்கு $16\frac{1}{2}$ கோடி ரூபா தேவையாகவுள்ளது.

ஆனால் இலங்கை வங்கிக்கு மட்டும் கடந்த ஆறு மாத காலத்தில் ஐந்தரைக் கோடி ரூபா வந்துள்ளது. மற்றைய வங்கிகளுக்குப் பணம் எதுவும் கொழும்பில் இருந்து வரவில்லை.

வழமையாக இலங்கை வங்கிக் கிளைகளில் தினசரி 50 லட்சம் ரூபாவரை சராசரியாக வைப்பிலிடப்படும். ஆனால் இப்போது ஒரு லட்சம் ரூபாவுக்கு குறைவாகவே வைப்பிலிடப்படுகிறது. இலவேலை நாட்களில் ஒரு சதம் கூட வைப்பிலிடப்படுவதில்லை.

இதனால் வங்கிக்கு தினசரி 5 லட்சம் ரூபா வரை இழப்பு ஏற்படுவதாக அந்த அதிகாரி சொன்னார்.

[உ-3-5]

# இந்தியா வெற்றி!

ஆசிய கிண்ணத்திற்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கட்டுகளால் பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 170 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணி 36.5 ஓவர்களில் ஒரு விக்கட் இழப்புக்கு 171 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்திலே வெற்றியீட்டியது.

[உ-எ]

# பொம்மரின் ஒரு பகுதி சிதைவுகள் குருநகர் மீனவர்களினால் மீட்பு!

குருநகர், டிச. 26

யாழ். கோட்டையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடந்த சண்டையின் போது விடுதலைப் புலிகளால் குடாக் கடலில் சுட்டு வீழ்த்தப்பட்ட பொம்மரின் சில சிதைவுகள் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளன.

இச் சிதைவுகளின் ஒரு பகுதி ஏற்கனவே குடாக் கடலில் இருந்து விடுதலைப் புலிகளினால், மீட்கப்பட்டு யாழ். முத்திரைச் சந்தியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மீட்கப்பட்ட சிதைவுகளை குருநகர் சனசமூக நிலையத்தில் மீனவர்கள் ஒப்படைத்தனர் என்று கூறப்படுகிறது.

[இ-51]

# பிரிகேடியரின் நீல நிற ஜீப்புக்கே விடுதலைப் புலிகள் குறி வைத்தனர்

## ரஞ்சன் வெளியிட்ட தகவல்

கொழும்பு, டிச. 26

மூதலிக்குளம் [மொறவெவ] நிலக் கண்ணி வெடித் தாக்குதலின்போது பிரிகேடியர் லக்ஷ்மன் விஜேரத்தினா, பிரதி பொலீஸ் மா அதிபர் விஜேசேகரா ஆகியோர் வந்த நீல நிற பஜிரோ ஜீப்புக்கே விடுதலைப் புலிகள் குறி வைத்தனர்.

இவ்வாறு செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா சொன்னார்.

பிரிகேடியர் இப்பகுதியில் தமது நடவடிக்கையின்போது இந்த நீல நிற ஜீப்பையே அடிக்கடி பயன்படுத்தி வந்தார்.

அன்றைய தினம் அவர்கள் சென்ற பாதை மிகவும் மோசமானது. சீர் செய்யப்படாத இப்பாதை வழியாக வாகனத் தொடர் மெதுவாகச் சென்றது. அப்போது அந்த ஜீப்புக்கு புலிகள் குறி வைத்தனர் - இவ்வாறு அமைச்சர் மேலும் சொன்னார்.

[உ-3]

# முடை, முடிச்சுகளுடன் அலையும் மக்கள்

கடந்த சில நாட்களாக கொழும்பு செல்வதற்கு என்று பலர் முடை, முடிச்சுகளுடன் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதிக்கு வந்து, கொழும்பு செல்ல முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்புவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

யாழ். — வவுனியா போக்குவரத்து கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டிருப்பதே பயணிகள் கொழும்பு செல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

(உ-6)

## ஹெலி மூலம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக, அரசாங்கத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் வங்கிகளின் தலைமை அதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டம் மாதத்தில் இரண்டு தடவைகள் நடப்பதுண்டு

அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில், வங்கிகளுக்குப் போதிய பணம் கிடைக்காமை குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது முன்னர், எந்தப் பிரச்சினையின் மத்தியிலும் யாழ்ப்பாண வங்கிகளுக்குத் தேவையான பணம் ஹெலிக்கொப்டர் மூலம் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டு, தங்களுக்கு வழங்கப்பட்டதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்போதே, துணிச்சல் மிக்க அந்த அரச உயர் அதிகாரி, "செ. ச. சர்வதேசக் குழுவிடம் புதுடில்லியில் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் உள்ளனவே; ஒரு ஹெலிக்கொப்டரை இங்கு கொண்டு வந்து பணம் ஏற்றிவரும் சேவையைச் செய்ய முடியாதா?" என்று கேட்டார்.

இது குறித்து தமது தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசித்து, அடுத்த கூட்டத்தில் பதில் சொல்வதாக செ. ச. சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

[அ-3]

## சாராயப் போத்தல்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றத்துக்கு எடுத்துவந்தது குறித்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த எதிர்கட்சியினர் சபாநாயகரின் அனுமதியின் பேரிலேயே அதைக் கொண்டுவந்ததாக விளக்கமளித்தனர்.

"சாராயம்தீப்பற்றக்கூடிய பொருள்" என்று ஆளும் கட்சியினர் தெரிவித்ததை அடுத்து அது நாடாளுமன்ற படைக்கல சேவிதரிடம் ஒப்படைக்கப்பட்டது.

[உ-3]

## பூந்தோட்டம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, அங்குள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நேற்றுக் காலையில் வவுனியாவிலிருந்து இவர்களை வடக்கு நோக்கிவர படையினர் அனுமதித்தனர்.

பூந்தோட்டம் பகுதியிலிருந்து நொச்சிமோட்டைப் பகுதியை நோக்கி - வயல்களூடாக - அங்குள்ள வரம்புகள் வழியாக பயணிகளைப் போகுமாறு படையினர் பணித்தனராம்,

குறுகிய வரம்புகளில் செல்லும்போது கால் இடறிய சில பயணிகள், வயல்களுக்குள் காலை வைத்த போதே மிதிவெடிகளில் சிக்கினர் என்று கூறப்பட்டது.

மிதி வெடியில் சிக்கி பத்துக்கும் அதிகமான பயணிகள் படுகாயமுற்றனர்; சிலர் கால்களை இழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சில பயணிகள் மிதிவெடிச் சிதறல்களினால் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

கால்களை இழந்த பயணிகளில் சிலர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

சிலர் யாழ்ப்பாணம் நோக்கி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், நேற்றிரவு இச்செய்தி எழுதப்படும் வரை அவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேரவில்லை.

சிறு காயங்களுக்கு இலக்கானவர்கள் [illegible] ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

(உ-3-5)

## சாவகச்சேரி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் இலங்கை வங்கியின் சாவகச்சேரிக்கிளையும் சேதமுற்றதாக யாழ்ப்பாணத்தில் பிராந்திய தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த குண்டு வீச்சில் ஜி. குணரத்தினம் என்பவரும் காயமுற்றார்.

நேற்று கிறிஸ்மஸ் தினமாகவும், சந்தை நாளாகவும் இருந்ததால் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் சனநெருக்கடி இருந்தது.

எனினும் பொம்மர்கள் வந்ததும் அனேகமானோர் பதுங்கு குழிகளையும், பாதுகாப்பு [illegible] யதால் [illegible] கப்பட்டன.

[இ-15-117]

# சுகாதாரப் பரிசோதகர் 25 வீதமே சேவையில்!

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 25 சத வீதமான சுகாதாரப் பரிசோதகர்களே தற்போது கடமையாற்றி வருகின்றனர். 75 சத வீதமான சுகாதாரப் பரிசோதகர்களின் பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகவே உள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 57 சுகாதாரப் பரிசோதகர்கள் கடமையாற்ற வேண்டும். ஆனால் தற்போது 12 பேரே கடமையாற்றுகின்றனர்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள புள்ளி விவரங்களிலிருந்து இது தெரிய வந்துள்ளது.

தற்போது அரசின் இளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் பலர் ஓய்வூதியம் பெற விண்ணப்பித்திருப்பதால் மேலும் நெருக்கடி ஏற்படலாம் எனவும்-

இதனால் பொதுச் சுகாதாரம் பெரிய அளவில் சீர்குலையலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-6]

## தமிழ்நாடு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முறை குறித்து பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்: போராளிகள் கைது செய்யப்படுவதை வெறும் கண்துடைப்பு என்று முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரம் கூறியிருக்கிறார். இது போன்ற அதிருப்திகளுக்கு இடமளிக்காது தமிழக அரசு நடந்து கொள்ள வேண்டும்.

தமிழக அரசின் செயற்பாடு குறித்து நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை- இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமரை தமிழக ஆளுநர் பர்னாலா, முதல் அமைச்சர் கருணாநிதி, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மற்றும் மாநில அமைச்சர்கள் வரவேற்றனர்.

விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்கத் திரண்டிருந்த காங்கிரஸ் மற்றும் அ. தி. மு. க. தொண்டர்கள், தமிழக தி. மு. க. அரசைக் கலைக்க வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர்.

தமது தமிழக விஜயத்தின் போது பிரதமர் காஞ்சிபுரத்தில் காமகோடி பீடாதிபதியைச் சந்தித்தார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவையும் பிரதமர் சந்திரசேகர் சந்தித்தும் பேச்சு நடத்தினார்.

[உ-எ]

## அடக்குமுறை -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிக் கூறினார்:

வத்திக்கானில் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் மத்தியில் அவர் ஆற்றிய உரை அறுபது நாடுகளில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது:

வளைகுடா யுத்தம் உலகிற்கு அழிவையே கொண்டு வரும்.

பலஸ்தீனியப் பிரச்சினைக்கு அவசரத் தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வேறென்ன மார்க்கம்?

அரசாங்கப் படைகள் கடந்த வாரம் கிழக்கில் ஆரம்பித்த ''ஒழித்துக் கட்டல்'' இராணுவ நடவடிக்கை, எந்த ரகத்தினது என எடுத்துக் காட்டப்பட்டு விட்டது!

அது கிழக்குத் தமிழரை அந்தமில்லாமல் ஒழித்துக் கட்டுவதற்கான பகிரங்க லைசென்ஸ் என்று, மூன்று நாட்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா?

அது சரியானதே என்பதை மட்டக்களப்பில், இரண்டு கிராமங்களில், நடந்த சம்பவங்கள் நிருபித்துள்ளன. 50க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள், யுவதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் அவர்களின் சடலங்கள் வீதி ஓரங்களில் விசப்பட்டிருந்தன. இது நிச்சயமாக பெரிய அளவிலான மக்கள் கொலைகளுக்கான [Mass Murders] ஆரம்பம் அன்றி வேறல்ல.

அப்பாவிகளான, நிராயுதபாணிகளான, தமிழ்ப் பொது மக்கள் கொன்று குவிக்கப்படுவது ஒன்றும் புதியதல்ல.

1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அது அடிக்கடி சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது. அரசாங்கத்தின முப்படைகளும், அரசின் கூலிப் படைகளும், குண்டர் கூட்டங்களும தமிழர்களை வேண்டாப் பிராணிகளாகக் கருதிக் கொன்றொழித்து வருகின்றன. அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரிலும், முழு ஆதரவுடனுமே தமிழர் ஒழிப்பு நடந்து வருகிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கிழக்கில் அது முழு அளவில் நடத்தப்பட்டது; நடத்தப்படுகிறது. தென்னிலங்கையில் ஜே. வி. பி. ஆதரவாளர்கள் கொல்லப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்படுவதற்கு முன்னர், 1986 இல் அக்கரைப்பற்றில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ விவசாயிகள் வயலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டு, வைக்கோல் போரில் இட்டு எரிக்கப்பட்ட சம்பவத்தை மறந்துவிட முடியாது.

அத்தகைய கன பரிமாணத்தில் தமிழர்களைக் கொல்வதற்கே ''ஒழித்துக் கட்டல்'' ஆரம்பமாகி இருக்கிறது: சர்வதேச மன்னிப்புச் சபை என்ன, மற்றும் மனித உரிமை இயக்கங்கள் என்ன, உதவி வழங்கும் நாடுகள் என்ன, எவையாவது எதையாவது சொல்லட்டும்; கண்டிக்கட்டும்; தமிழரை ஒழிப்பதென்ற நோக்கத்தை நிறைவேற்றாமல் விடுவதில்லை என்று அரசு கங்கணம் கட்டியிருக்கிறது!

ஆகவே இப்போது நடக்கும் போரை வெறும் உள்நாட்டு யுத்தம் என்று உலக நாடுகள் கொள்ளலாமா? இது திட்டமிட்ட நேரடியான இன ஒழிப்பு அல்லவா?

இத்தகைய ஓர் அழிவு தீவிரம் அடையும்போது, உலகம் உதவிக்கு வராதபோது, தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாப்பதற்கு ஆயுதம் தாங்குவதைவிட வேறு என்ன மார்க்கம் உண்டு?

போராளிகள் மட்டுமல்ல சகல தமிழ்ப் பொதுமக்களும் ஆயுதம் தரித்தால் தான் தங்களைக் காப்பாற்ற முடியும் என்ற நிலைக்கு, அரசாங்கம் அவர்களை நிர்பந்தித்துத் தள்ளுகிறது. அவ்வளவுதான்; வேறு எதனைத்தான் சொல்ல முடியும்?

## நல்லூரில் புதிய கிளை

யாழ்ப்பாணம், டிச. 26

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை ஒன்று கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, நாயன்மார்க்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. பொ. கனகசபாபதி இதனை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் நல்லூர் உ. அ. அதிபர் திரு. ஆ. மாகாலிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவுப் பொறுப்பாளர் திரு. மயூரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-6)

## ஆணைக்குழு சட்டமூலம்

கொழும்பு, டிச. 26

தேசியக் கல்வி ஆணைக் குழுவை நிறுவுவதற்கான சட்டமூலம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான சட்ட மூலம் கடந்த புதன் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டது. (இ-ள்)

# பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடங்கல்

## படிவங்கள் இல்லை என அதிகாரிகள் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 26

வடபகுதியில் கடந்த ஜூன் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழந்தவர்களினதும், அங்கவீனர் ஆகியோரினதும் குடும்பங்களுக்கு ''கடும் பாதிப்புற்றோர் நிவாரணம்'' பெற்றுக் கொடுப்பதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் கைவசம் இல்லை. இதனால் இவர்களுக்குரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுப்பிரிவு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் கடும் பாதிப்புற்றோர் நிவாரண விண்ணப்பப் படிவங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தாம் கொழும்பை கேட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடும் பாதிப்புற்றவர்கள் விண்ணப்பிப்பதற்குரிய முக்கிய ஆவணங்களை (மரணச் சான்றிதழ், பிறப்பத்தாட்சிப் பத்திரம்) தயார் நிலையில் வைத்திருந்தால் மேலதிக தாமதத்தைத் தவிர்க்கலாம் என்றும் விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்ததும் பத்திரிகைகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

(இ-5-6)

## வடமராட்சி கிழக்கில் 2ஆம் கட்ட நிவாரணம் இல்லை

தாளையடி, டிச. 26

வடமராட்சி கிழக்குப் பகுதியில் விசேட இரண்டாம் கட்ட உலர் உணவுப்பொருள்கள் மக்களுக்கு இன்னமும் விநியோகிக்கப்படவில்லை.

கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் இரண்டாம்கட்ட உலர் உணவுப் பொருள்களை யாழ். மாவட்ட மக்கள் அந்தப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பெறலாமென அறிவிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் தினமும் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குச் சென்று பொருள்கள் வழங்கப்படாததினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றார்கள்.

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உலர் உணவுப்பொருள்களை விநியோகம் செய்வதற்கான போதுமானளவு அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததினாலேயே, விசேட இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லைஎன்று கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை உணவு முத்திரைக்கான ஐந்தாவது புள்ளிக்கான பொருள்களும் இப்பகுதியில் மக்களுக்கு பூரணமாக வழங்கி முடிக்கப்படவில்லை.

இதனால் வடமராட்சி கிழக்கு மக்கள் பெரும் உணவுக் கஷ்டத்தினை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (அ-144)

## வட்டுக்கோட்டைப் பகுதி

## குளங்களின் வாய்க்கால்கள் பற்றிய தகவல் திரட்ட முடிவு

அராலி, டிச. 26

வட்டுக்கோட்டைப்பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களின் வாய்க்கால்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுமாறு சகல கிராமிய உற்பத்திக் குழுக்களையும் வட்டுக்கோட்டை பிராந்திய உற்பத்திக்குழுப் பொறுப்பாளர் கேட்டுள்ளரர்.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் உள்ள குளங்களின் வாய்க்கால்கள் அழிக்கப்பட்டுள்ளதால் விவசாயம் பாதிக்கப்படும் அபாயம் உருவாகி இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற வாராந்தபிரதேச உற்பத்திக்குழுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

★ உள்ளூர்மூலவளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பண்டங்கள் மற்றும் பாவனைப்பொருள்கள் கைத்தொழில்கள் போன்றவற்றை ஊக்குவிக்குமுகமாக பிரதேசத்தில் ஒரு கண்காட்சியை நடத்துதல் இதில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் வழங்குதல். இக்கண்காட்சியை தமிழர் திருநாள் தைபொங்கல் தினத்தன்று நடத்துதல்.

★ இப்பகுதியில் பயிர் செய்யப்படாது இருக்கும் சகல காணிகளும் உடனடியாக பயிர்செய்யப்படாத பட்சத்தில் அவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

★ இயங்காது இருக்கும் கிராமிய உற்பத்திக் குழுக்களை கலைத்து புதிய குழுக்களை அமைத்தல்.

[இ-12]

## படகுச் சேவை மீண்டும் வண்ணாங்குளம் வரை

கொம்படியில் இருந்து புல்லாவெளி வரை நடத்தப்பட்ட படகுச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பாதையில் நீண்டநேரம் படகில் பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதனாலும், பாதுகாப்பற்ற பாதையாக இது அமைந்திருப்பதனாலுமே, இப்பாதையில் நடத்தப்பட்ட படகுச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

சகல படகுச் சேவைகளும் கொம்படியிலிருந்து வண்ணாங்குளம் வரை தற்போது மீண்டும் நடத்தப்பட்டு வருகின்றது.

அங்கிருந்து வாகன சேவைகள் வடமராட்சி கிழக்கு ஊடாக பருத்தித்துறைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் நடத்தப்படுகின்றன. [அ-144]

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் காளான் உற்பத்தி நிலையங்கள்

## 3 லட்சம் செலவில் பல்கலைக்கழகம் திட்டம்

யாழ்ப்பாணம், டிச.26

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும், காளான் வளர்ப்பு உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதற்கென 3 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி விவசாய பீடத்துடன் இணைந்து காளான் வளர்ப்புத் திட்டத்துக்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட விருக்கிறது.

காளான் உணவுப் பொருளாகப் பயன்படுத்தக் கூடிய ஒன்றாகும்.

இது உயர் புரதம் கொண்டது. நீரிழிவு நோயாளர்களுக்கு சிறந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் காளான் விதையின் விலை குறைவாக இருப்பதுடன் அதனை வளர்ப்பதற்கு [illegible] போன்ற [illegible] வரனது. பசளை அதிகம் தேவையில்லை.

இலங்கையில் கொழும்பிலுள்ள ஏற்றுமதி அபிவிருத்தி சபை மட்டுமே இதனை உற்பத்தி செய்கிறது.

உற்பத்தி செய்யப்படும் காளான்கள் இச்சபையால் அதிக விலையில், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காளான் வளர்ப்பு திட்டம் [illegible] மேற்கொள்ளப்பட இருப்பது இதுவே முதற் தடவையாகும். [அ-6]

## தேடும் முயற்சி!

கொழும்பு, டிச. 26

தப்பிச்சென்ற - ஜே. வி. பியின் தற்போதைய தலைவரான - சோமவன்ஸ அமரசிங்கா இந்தியாவில் எங்கு தங்கி இருக்கிறார் என்பதைக் கண்டறியும் முயற்சியில் இலங்கைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இத்தகவலை வெளியிட்டார். [உ-எ]

## கே. ஜி. பி. குற்றச்சாட்டு அமெ. மறுப்பு

சோவியத் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க மேற்கு நாடுகள் முயற்சிப்பதாக ரஷ்ய உளவு ஸ்தாபனமான 'கே. ஜி. பி.'யின் தலைவர் குருஷ்கோவ் தெரிவித்த குற்றச்சாட்டை அமெரிக்கா உத்தியோகபூர்வமாக மறுத்து உள்ளது.

கடந்த வாரம் சோவியத் நாடாளுமன்றத்தில் பேசுகையில் கே. ஜி. பி. தலைவர் இக் குற்றச்சாட்டை விடுத்திருந்தார்.

சோவியத் யூனியனில் நிலவும் நெருக்கடிகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதில் மேற்குலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன என்றும்—

பொருளாதார நெருக்கடிக்கு உதவுகின்றோம் என்ற பெயரில் சோவியத் யூனியனில் சீர்குலைவுச் சக்திகளுக்கு துணை செய்வதில் மேற்கு நாடுகள் ஈடுபட்டுள்ளன என்றும் கே. ஜி. பி. தலைவர் அப்போது கூறியிருந்தார். (இ-எ)

## ருஷ்டி மீதான மரணதண்டனை ரத்துச் செய்யப்படலாம்

லண்டன். டிச.26

'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதி வெளியிட்டதற்காக சல்மான் ருஷ்டிமீது விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பை ரத்துச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் மதத்தலைவர்கள் சிலர் லண்டனில் சல்மான் ருஷ்டியுடன் கடந்த திங்கட்கிழமை நடத்திய பேச்சுக்களின் போது—

'சாத்தானின் கவிதைகள்' நூலின புதிய பதிப்பை வெளியிடுவதில்லை என்று ருஷ்டி உறுதியளித்தார்.

அத்துடன் தாம் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர் என்றும் அதற்கு விசுவாசமாகவே நடப்பார் என்றும் ருஷ்டி அப்போது தெரிவித்தார்.

இந்த உறுதி மொழிகள் அடங்கிய தஸ்தாவேஜு ஒன்றையும் ருஷ்டி, முஸ்லிம் தலைவர்களிடம் அப்போது கையளித்தார்.

ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்துச் செய்ய இத்தஸ்தாவேஜு போதுமானது என்றும்—

இது குறித்து நல்ல செய்தியை சில தினங்களில் எதிர்பார்க்கலாம் என்றும் ருஷ்டியுடன் பேசிய முஸ்லிம் தலைவர்களில் ஒருவர் பி.பி.சிக்கு தெரிவித்தார்.

'சாத்தானின் கவிதைகள்' நூல் இஸ்லாமை நிந்திப்பதாகக்கூறி, மறைந்த ஈரான் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கோமெனி, ருஷ்டி மீது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மரணதண்டனை விதித்து இருந்தார் என்பது தெரிந்ததே. (இ-எ)

## மணிவாசகரின் மாண்பு

திருவெம்பாவையால் சிவபெருமானின் உள்ளங்கவர் புலவனாகிய மணிவாசகப் பெருமான், மந்திரியாய் இருந்த மாதவத்தோன். இவருடைய பிள்ளைப் பெயர் திருவாதவூரர் என்பது.

இவருடைய கல்வி கேள்வி அறிவுடைமை முதலியவற்றை கேள்வியுற்ற பாண்டியன் அரிமர்த்தனன் இவரை அழைத்து புகழ்ந்து பேசி பொருள் கொடுத்து அமைச்சராய்த் தேர்ந்தெடுத்தான். தென்னவன் பிரமராயன் என்ற பட்டப் பெயரும் சூட்டினான.

தோதல் இல்லாத் தேர்வில் தெரிவான அமைச்சர் நாட்டிற்கும் மக்களுக்கும் நல்லது செய்யும் மதி மந்திரியானார். நாடு வளம் பெற்றது. மக்கள் மனம் குளிர்ந்தனர்.

பாண்டிய நாட்டிற்கு குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் திருப்பெருந்துறையை அண்மித்ததும் தம்முள் மாற்றங்கள் பல நிகழ்வதை உணர்ந்தார். குருவீச்சு - சிவவீச்சு செவியில் பட்டது. உள்ளத்தில் உவகை ஊறியது. உடலில் மெய்ம்மயிர் பொடித்தது. விழிப்புனல் துளித்தது. இன்ப அனுபவம் அரும்பியது; திருப்பெருந்துறையுறை சிவபெருமானை அருட்குருவாகக் காணும் பேறு கிடைத்தது. அங்குள்ள குருந்தமர நிழலில் மாணவர் அணியுடன் ஞானாசிரியனாய் அம்மையப்பன் வீற்றிருந்தான்.

ஆனந்த மேலீட்டால் ஞானாசிரியனின் திருவடிகளில் வீழ்ந்தார் அமைச்சர். அருட்குருவாய அப்பன் தன் திருவடியை அவர் தலைமேல் சூட்டி திருக்கரத்தால் தோளைத் தொட்டு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். அருட்குருவின் அருவாசி தேனும் பாலும் தீங் கன்னலும் அமுதமாய்த் தித்தித்தது. ஊனையும் எலும்பையும் உருக்க, உள்ளொளி உணர்ந்து, தொழுத கையினராய், அழுத கண்ணினராய் தம்மை மறந்தார். பண் சுமந்த பாடல்களை அருளிச் செய்தார். பாடல் கேட்ட பரமசிவன் வழுவிலாத பேராக மாணிக்க வாசகன் என்று' திருநாமஞ் சூட்டினான்.

### திருவெம்பாவை சிறப்பம்சம்

புலவர்

ஈழத்துச்சிவானந்தன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல: 868 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். "அரஸ் ஜவுளிவகம்" 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

## தவறிவிட்டது

சின்னத்தம்பி கதிர்காமநாதன் என்பவரது 382951131X இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர் கீழ் காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். S. சிவதாசன் செம்மக்கட்டுவன், மூளாய், சுழிபுரம். [15273]

## மணமகள் தேவை

உத்தியோகம் பார்க்கும் றோ. க. மணமகனுக்கு32க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. பிற மதத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு 163, C/o உதயன் யாழ்ப்பாணம். (15283)

## வகுப்புக்கள் (ஆண்டு -4,5)

1991ம் கல்வியாண்டிற்கான புதிய வகுப்புக்கள் (ஆண்டு 4, 5) 26 - 12 - 90 புதன் 10 மணிக்கு 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். அரசடி. கொக்குவில் மேற்கு (மக்கள் வைத்தியசாலை முன்பாக) நடைபெறவுள்ளன. தமிழ். கணிதம், ஆங்கிலம் கற்பிக்கப்படும். (15278)

## லீலா காமன்ஸ்

பெண்களின் நவ நாகரீக ஆடைகள் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும். குறிப்பு [பெண்கள் "மிஸ்கின்ஸ்" ஸ்தாபத்தில் பணிபுரிந்த அதே ஊழியர்களே இப்புதிய இடத்தில் கடமையாற்றுகிறார்கள் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்] "லீலா காமன்ஸ்", இல. 220, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். [15284]

# 1991ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

எனது 24-11-90, 16-12-90ம் திகதிகளில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

"வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் பட்டினம்/மானிப்பாய் கிராமம்/பண்டத்தரிப்பு பட்டினம்/பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகள் ஆகியவற்றிற்கான சீல்வைத்தகேள்விகள்என்னால்28-12-90ம் திகதி பி.ப. 3-00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 28-12-90 நண்பகல் 12-00மணி வரை விநியோகிக்கப்படும்."

இ. இராமலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,

தலைமை அலுவலகம்,
வலி. தென்மேற்கு பிரதேசசபை,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
24 - 12 - 90. (C/5561)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## துரையப்பா சுப்பிரமணியம்

[முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர் கொக்குவில், கோண்டாவில்.]

தோற்றம்: 15 - 06 - 1909
மறைவு: 05 - 01 - 1990

திதி: 26 - 12 - 1990

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

மகன்: சுப்பிரமணியம், சேய்மானந்தன்.

[15193]

# தமிழீழ போக்குவரத்துக் காவல்துறையினரின் விளம்பரம்

போக்குவரத்துக் காவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்:**

1. உயரம் — 5 அடி 6 அங்.
2. மார்பளவு — 32 அங். (மூச்சு வெளியேறிய நிலையில்)
3. வயதெல்லை — 01 - 01 - 1991 இல் 18 தொடக்கம் 30 வரை.

**கல்வித் தகைமை:**

க.பொ.த. சாதாரணம் தமிழ்மொழி அல்லது தமிழ் இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்:**

1. சாரணியம்,
2. முதலுதவிப் படை,
3. விளையாட்டு,

இதில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

1. உதவிப் பணம் வழங்கப்படும்.
2. யாழ். மாவட்டத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30 - 12 - 1990 க்கு முதல் அல்லது அன்று சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கப்பட வேண்டும்.

**போக்குவரத்துக் காவல்துறை,**
**கோண்டாவில், :-: யாழ். மாவட்டம்.**
(கி-5562)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை பார்வதி

புங்குடுதீவு மேற்கு 6 ஆம் வட்டாரத்தில் வசித்த கனகசபை பார்வதி அவர்கள் 25 - 12 - 90 இல் காலமானார். இவர் கனகசபையின் அன்பு மனைவியும், தங்கவேலு (காசாளர் - றீக்கோ, யாழ்ப்பாணம்) ஜெயரெத்தினராசா, ஸ்ரீஸ்கந்தராசா, புவனேந்திரராசா, பஞ்சரெத்தினராசா ஆகியோரின் தாயாரும், ஜெயராணி, லலிதாதேவி, கமலாதேவி, ஜெயந்தி, ஜலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 26 - 12 - 90 புதன்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. தங்கவேலு.
புங்குடுதீவு. 6 (14886)

## சிவக்கொழுந்து தர்மலிங்ம்

சிவக்கொழுந்து தர்மலிங்கம் [ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பிறவுண் அன் கொம்பனி, கொழும்பு] காலமானார்.

இவர் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், நவரத்தினம், காலஞ்சென்ற சிவபாலசிங்கம், யோகராசா, பவளராணி, பூமலர் ஆகியோரின் சகோதரரும், குலத்துங்கம், விஸ்வநாதன், வேலாயுதம், வினாசித்தம்பி, காசிநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கோப்பாய் வடக்கு மயானத்தில் 26-12-90 [புதன்கிழமை] நண்பகல் 12 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
காசிநாதர் [மைத்துனர்]
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (15288)

## திரு. கதிரவேலு நல்லையா

(மாங்கன்று நல்லையா)

இளைப்பாறிய திரு. கதிரவேலு நல்லையா 22 - 12 - 90 இல் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26 - 12 - 90 புதன்கிழமை [இன்று] நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் கனக்கன் மரத்தடி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. கணேசலிங்கம், [மருமகன்]
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [15287]

# யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

## பதவி வெற்றிடங்கள்

1. **நிர்வாக அலுவலர் (Administrative Assistant)**
   வயது 30-45; தகமை க.பொ.த (உ.த) சித்தி அனுபவம் - குறைந்தது 5 வருடம் - நிர்வாகத் திறன், தகவல் பரிமாறல், கணக்கியல், அலுவல ஒருங்கிணைப்பு, முகாமை, தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி.
2. **லிகிதர் / தட்டெழுத்தாளர். (Clerk Cum Typist)**
   வயது 25-35; தகைமை க.பொ.த. (சா.த) சித்தி அனுபவம் குறைந்தது 3 வருட அலுவலகவேலை. தமிழ் / ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்து, கணக்கியல்.
3. **அலுவலக உதவியாளர்:- (Office - Asst)**
   வயது:- 25-45;
   தகமை:- க. பொ. த. [சா/த] சித்தி
   அனுபவம்: குறைந்தது 3 வருட அலுவலக வேலை

★ குறிப்பு:- சேவைமனப்பான்மையும், பொதுசன தொடர்பும், சமுக தொண்டர் ஸ்தாபன அனுபவமுடையவர்களுக்கு முன் கணிப்பு வழங்கப்படும்.

★ மேற்கூறிய பதவிகளுக்குப் விண்ணப்பதாரர்கள் தத்தம் விண்ணபங்களுடனும், உரிய சான்றிதழ்களுடனும்

**1990 - 12 - 29ஆம் திகதி காலை 9 மணிக்கு**

**இல 100, சிலன் வீதி**
**(இராசாவின் தோட்டம்)**

இணைய அலுவலகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர்.

★ பதவிக்கும், அனுபவத்திற்குமேற்ப சம்பளம் பேசி வழங்கப்படும்.

★ 01 - 01 - 1991 அன்று கடமையைப் பொறுப்பேற்கக்கூடியவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கவும். [15268]

# அறிவித்தல்

## HOME FINANCE LTD, JAFFNA BRANCH DEPOSITORS ASSOCIATION

**ஹோம் பினான்ஸ் யாழ்ப்பாணக் கிளை பணவைப்பாளர் சங்கம்**

போக்குவரத்து வசதியீனத்தால் மத்திய வங்கி பிரதிநிகள் [உத்தியோகத்தர்கள்] நிவாரண கொடுப்பனவுக்காக [Relief Payment] யாழ்ப்பாணம் வருவதில்லை. ஆகவே இச்சங்கம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் [Auditors] பிரதிநிதி ஒருவரை நியமித்து கொடுப்பனவுகளை வழங்குமாறு கேட்டுள்ளோம் என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகிறோம்.

நா. சிவாமுத்துலிங்கம் [தலைவர்]
ஆ. பாலகிருஷ்ணன் [செயலாளர்]
(15277) 23-12-1990

# மரண அறிவித்தல்

## கதிரவேற்குருக்கள் சுப்புலட்சுமி அம்மா

மாதகல் கிழக்கைச் சேர்ந்த சுப்புலட்சுமி அம்மா [25-12-90] இல் காலமானர்.

இவர் காலஞ்சென்ற சிவஸ்ரீ கதிரவேற் குருக்களின் அன்பு மனைவியும், சிவஸ்ரீ செல்லப்பாக் குருக்கள், காலஞ்சென்ற சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ தருமலிங்கக் குருக்கள், ராணி சரோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி அம்மா, புவனசுந்தரி, ஜெயலட்சுமி, ரவீந்திரநாத சர்மா (யூனிவேர்சல் லிங்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்றுக்காலை 11.30 மணி ளவில் மாதகல் போதி இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
ராணி சரோஜினி
மாதகல் கிழக்கு,
மாதகல். (ஓ/5563)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 295/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org